# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. CC/112/2024** |
| **Sessions** | : | |
| | | **Prosecution** |
| **Deposition of witness for** | : | **PW1, LW/1** |
| **Name** | .. | சதீஷ் |
| **Father's/Husband's Name** | .. | சகாயநாதன் |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **32** |

**Date: 11.02.2026**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது எண் 8, 2வது தெரு, திலகர் நகர், எண்ணூர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் துபாயில் வேலை செய்து வருகிறேன். கடந்த 07.03.2023 அன்று எனது மனைவி சிலுவை மேரி என்பவர் அம்பத்தூரில் உள்ள ICICI வங்கியில் பணி முடித்துவிட்டு

வீட்டிற்கு TN 12 F 0095 என்ற ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது மணலி எக்ஸ்பிரஸ் ரோடு, சத்தியவானி மூர்த்தி நகர் அருகே வந்து கொண்டிருந்த போது அவருக்கு பின்னால் வந்த லாரி அவர் மீது மோதியது. முன் இடது புற சக்கரம் எனது மனைவியின் வயின்றின் மீது ஏறி இறங்கியதில் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாக தகவல் கிடைத்து சம்பவ இடம் சென்று பார்த்த போது எனது மனைவி இறந்த நிலையில் காணப்பட்டார். எனது மனைவியின் பிரேதத்தினை ஸ்டான்லி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (புகார் **அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

2. விபத்து சம்பந்தமாக எனக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் போலீசார் தான் தகவல் கொடுத்தார்கள். புகார் மனு எப்பொழுது கொடுத்தீர்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்தே புகார் மனு கொடுத்தேன்.

3. பட்டியல் சாட்சி 2. ஒரே பகுதியை சார்ந்தவர் பட்டியல் சாட்சி 3. சகாயநாதன் உங்களுடைய தந்தை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நான் போன போது யார் யார் இருந்தார்கள் என்றால் போலீசார் தான் இருந்தார்கள்.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2026.02.11 17:18:38 +0530

நீதித்துறை நடுவர்,
திருவொற்றியூர்